IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO.145/2009 P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | சாந்தி |
| FATHER'S NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872

25.06.2024.

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்

கு.வி தொடர்ச்சி

எனக்கு சொத்தை விற்ற கஸ்தூரிக்கு வீட்டு வசதி வாரியம் அந்த சொத்தை கரய பத்திரம் எழுதிகொடுத்திருந்தது. தாவா சொத்து உட்பட மற்ற சொத்துக்கள் ஆதியில் நயினா முதலியார் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 07.02.1979 அன்று வீட்டு வசதி வாரியம் அந்த சொத்துக்களை ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அன்றே வீட்டு வசதி வாரியம் அந்த சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த நிலத்திற்கான நஷ்ட ஈடு தொகை முழுவதையும் நயினா முதலியார் வாரிசுகள் வாங்கிக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்து பார்த்ததில்லை. அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு

தெரியாது. 26.01.1981 அன்று நயினா முதலியார் வாரிசுகள் எனக்கு சொத்தை விற்ற கஸ்தூரி அம்மாவிற்கு ஒரு கிரய பத்திரம் எழுதி கொடுத்தது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் நில ஆர்ஜிதம் செய்ததை தெரிந்து கொண்டு கிரய தொகை ரூ.1,500/- திரும்ப பெற்றுக்கொண்டு 20.04.1981 அன்று மேற்சொன்ன 26.01.81 தேதியிட்ட கிரய பத்திரத்தை கஸ்தூரிஅம்மாள் ரத்து செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எம்.ஏ. பட்டபடிப்பு படித்திருக்கிறேன். வீட்டு வேலை செய்கிறேன். மேற்சொன்ன 20.04.81 தேியிட்ட ரத்து பத்திரம் பதிவு செய்யப்பட்ட அன்றே கஸ்தூரி அம்மாள் தனக்கு உரிமை இல்லை என்று தெரிந்துகொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பின்னர் அரசு அந்த நில ஆர்ஜிதத்தை ரத்து செய்துவிட்டதால் நயினா முதலியார் வாரிசுகளுக்கு மறு கிரய பத்திரம் எழுதிகொடுப்பதற்கு பதிலாக கஸ்தூரி அம்மாள் 1,2 பிரதிவாதிகளிடமிருந்து தன் பெயருக்கு வா.சா.ஆ.1 ன் படி கிரய பத்திரம் பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கஸ்தூரி அம்மாளுக்கு 1, 2 பிரதிவாதிகள் மறு கிரய பத்திரம் எழுதி கொடுத்திருந்தாலும் 05.08.2009 வரை அந்த சொத்து மற்று இதர சொத்துக்களின் சுவாதீனம் 1, 2 பிரதிவாதிகளிடம் தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 05.08.2009 அன்று 1, 2 பிரதிவாதிகள் நயினா முதலியார் வாரிசுகளுக்கு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை மறு கிரய பத்திரத்தின் மூலம் பாத்தியப்படுத்தி சுவாதீனத்தையும் ஒப்படைத்தார்கள் என்றால் அவ்வாறு கொடுத்தது தவறாகும். கஸ்தூரி அம்மாளுக்கு 1, 2 பிரதிவாதிகள் எழுதி கொடுத்த 10.03.1993 தேதியிட்ட வா.சா.ஆ.1 சட்டப்படி ெல்லாது என்றால் சரியல்ல. 20.04.81 கிரய ரத்து பத்திரம் நிலுவையில் உள்ள போது 10.03.1993 தேதியிட்ட வா.சா.ஆ.1 ன்படி கஸ்தூரி அம்மாளுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் சென்றடையவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன்படி 29 செண்ட் கஸ்தூரி அம்மாளுக்கு எழுதிகொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 செல்லாது என்று ஆகிவிட்ட போது அதன் பின்னிட்டு வா.சா.ஆ.2 ம் செல்லாது என்றால் சரியல்ல. எனவே அதன் தொடர்ச்சியாக சசிகலா எனக்கு எழுதிகொடுத்த வா.சா.ஆ.3 சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ன்படி 29 செண்ட் நயினா முதலியார் வாரிசுகளுக்கு 1, 2 பிரதிவாதிகளால் எழுதிகொடுக்கப்பட்டது என்று நான் கூறுவது தவறு என்றாலும் 91 செண்டுகள்

எழுதிகொடுக்கப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஐ பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 நான் வாங்கிய கிரய பத்திரத்தின் நகல். அதில் சொத்து சம்மந்தமாக வில்லங்கங்கள் இருந்தால் அதை விற்ற சசிகலா சரிசெய்து தர வேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வில்லங்கத்தை நிவர்த்தி செய்து தர சொல்ல வாய்மொழியாக சசிகலாவிடம் சொன்னேன் எழுத்து பூர்வமாக கேட்கவில்லை. எனக்கு 67 செண்டு உரிமை என்று கோருகிறேன். சசிகலாவிடமிருந்து வாங்கிய வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள 28 செண்டுக்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.5 அறிவிப்பை நான் தான் என் வழக்கறிஞர் மூலம் அனுப்பினேன். அதன் நகலை சசிகலாவிற்கோ, கஸ்தூரி அம்மாளுக்கோ அனுப்பவில்லை என்றால் அவ்வாறு அனுப்ப வேண்டும் என்று எனக்கு தெரியாது. எனக்கு ஏதேனும் பரிகாரம் தேவை எனில் நான் சசிகலாவிடமோ, கஸ்தூரி அம்மாளிடமோ தான் கோர வேண்டுமே ஒழிய 1, 2 பிரவாதிகளிடம் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல 1, 2 பிரதிவாதிகளின் சொத்தை நம்பி தான் வாங்கினேன். வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பின்படி 1, 2 பிரதிவாதிகள் அதில் சொல்லியுள்ளவாறு சசிகலாவிடமோ, கஸ்தூரி அம்மாளிடமோ தான் நான் பரிகாரம் கோர வேண்டுமே ஒழிய 1, 2 பிரவாதிகளிடம் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாவாவில் சொல்லியுள்ள சொதது விவரம் தவறு என்றால் சரியல்ல. குறைவான சொத்திற்கு பரிகாரம் கோரிவிட்டு அதிகமான சொத்து கேட்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

S ABDUL MALIK

Digitally signed by S ABDUL MALIK